R5264

# Some Interesting Questions
# ஆவலைத் தூண்டும் சில கேள்விகள்

ஆதாமிய மரணமா? அல்லது பலியின் மரணமா?

கேள்வி : ஒரு வேளை தேவனுடைய அர்ப்பணம் செய்த பரிசுத்தவான்களில் ஒருவர் வெள்ளம், தீ முதலான இயற்கை சீற்றத்தால் மரித்தால் அது பலியின் மரணமா அல்லது ஆதாமிய மரணமா?

பதில் : அர்ப்பணம் செய்த ஒரு தேவனுடைய பிள்ளை ஆதாமிய மரணத்தை பெற முடியாது. அவரது மரணம் பலியின் மரணமாகவோ அல்லது இரண்டாம் மரணமாகவோ இருக்கும். அர்ப்பணம் செய்த ஒரு தேவனுடைய பிள்ளை மரித்தால் அந்த மரணம் அது அவர் முன்னரே செய்திருந்த அர்ப்பணத்தின் வெறும் நிறைவேறுதலாகும். நமது ஜீவன் மகா பிரதான ஆசாரியரால் பரிசுத்தமும் பிரியமுமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் தேவனுடன் அர்ப்பணம் செய்த இந்த பிள்ளை அவரை விட்டு விலகினால் அது இரண்டாம் மரணமாகும். அவர் வேண்டுமென்றே, தெரிந்தே பாவம் செய்தல் அவர் மரணத்திற்கு ஏதுவான பாவத்தை செய்கிறார். (1யோவான் 5:16)

## நமது கர்த்தரின் ஞானஸ்நானம்

கேள்வி : நமது கர்த்தர் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னரே தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றாரா?

பதில் : நமது ஆண்டவரின் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு பிறகே இயேசுவின் மேல் பரிசுத்த ஆவி இறங்கியதை தேவன் வெளியரங்கமாக்கினார் என்று நமது கர்த்தரின் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றதைப் பற்றிய வேதாகம பதிவு குறிப்பிடுவதாக தெரிகிறது. தண்ணீரில் அவர் முழுகுவதற்கு முன்னரே மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தை பெற்றார்; அதாவது அவரது சொந்த சித்தத்தை விட்டு விட்டார்; அதாவது பழைய ஏற்பாட்டிலிருந்து அப்போஸ்தலர் மேற்கொள் காட்டுவது போல, “நான் இதோ வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது. என் தேவனே, உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன்.” ( சங்கீதம் 40:7,8; எபிரேயர் 10:7 ) நமது கர்த்தர் புத்தகத்தில் அவரைக் குறித்து எழுதியிருக்கிற அனைத்தையும் செய்யவே அவர் வந்தார்.

நமது கர்த்தர் அவரது சித்தத்திற்கு முன்னரே மரித்தவராக இருந்தார். இல்லையென்றால் அவர் யோர்தானில் யோவானிடத்திற்கு சென்றிருக்க மாட்டார். இயேசுவின் பலியை தேவன் ஏற்றுக்கொண்டதை வெளியரங்கமாக்குவதற்கு இயேசு அடையாளத்தை நிறைவேற்றும் வரை தேவன் காத்திருந்தார். ஆகையால் அவர் தண்ணீரிலிருந்து மேலே வந்த பிறகு பரிசுத்த ஆவி ஒரு புறாவைப் போல இறங்கியது என்று நாம் வாசிக்கிறோம். வேத வாக்கியங்கள் அறிவிக்கிறதை போல “கண்டு சாட்சி கொடுத்த” யோவானைத் தவிர வேறு யாருக்கும் அந்த வெளியரங்கமான அடையாளத்தை கொடுக்கவில்லை. (யோவான் 1:32-34)

## குணலட்சண அபிவிருத்தி

கேள்வி : திரைக்கு மறுபுறத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் ஒருவராக இருப்போம் என்கிற நல்ல நம்பிக்கையை பெறுவதற்கு நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் குணலட்சண சாயலை திரைக்கு இந்த பக்கம் ஒருவர் பெறுவதற்கு எவ்வளவு அருகாமையில் இருக்கிறார்?

பதில் : அபூரணமான எதையும் யேகோவா தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். நமது மாம்சீக சுபாவம் பிரதான ஆசாரியரால் ஒப்புக்கொடுக்கப்பட்டால் கூட, முதலாவது ஆசாரியரின் புண்ணியத்தினால் மூடப்பட வேண்டியதாயிருக்கிறது. இப்படியாக தெய்வீக ஏற்புக்கு முன்பாக பூரணப்பட வேண்டியதாயிருக்கிறது. நம்மை நாமே நினைத்து பார்க்கும் போது புது சிருஷ்டியை மண்பாண்டத்தில் நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். புது சிருஷ்டியானது கிறிஸ்துவின் சாயலை பெற்றிருக்க வேண்டும்.

மாம்சத்தில் நாம், உலகம், மாம்சம் மற்றும் பிசாசினால் சூழப்பட்டிருக்கிறோம். இவர்களெல்லாம் புது சிருஷ்டியானது பூரணமாக கிரியை செய்வதை தடுப்பதற்கு சதி செய்கிறார்கள். “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்” (மத்தேயு 5:8) என்று இயேசு கூறினார். இருதய சுத்தம் பூரணமாக இருக்க வேண்டும்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களின் நோக்கம் சுத்தமாகவும் குறிக்கோள்கள் சுத்தமாகவும், விருப்பம் மேலானதாகவும் இருந்து மேலானதையே விரும்புவார்கள். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மகிமையான காரியத்தைக் குறித்து தேவனிடத்தில் பலமான சமாதானத்தையும் முழு நம்பிக்கையும் பெற்றிருப்பார்கள். ஏனெனில் இந்த அழிந்து போகக்கூடிய சரீரத்தில் அவர்களால் செய்ய முடிந்ததற்கு மேலாக செய்யக்கூடும். இப்படியாக தங்கள் பக்தியை காண்பிப்பார்கள்.